# தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
# (15.06.2016 முதல் 19.06.2016)

**அறிக்கைஎண் :048/2016** **தேதி:14.06.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 30°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் பரவலான மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை:ஈரோடு (15.06.2016 முதல் 19.06.2016)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 77 முதல் 79 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 59 முதல் 62 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 17 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 15.06.16 | 0 | 33 | 24 | 4 | 77 | 59 | 17 | தெற்கு |
| 16.06.16 | 0 | 33 | 24 | 4 | 77 | 59 | 17 | தெற்கு |
| 17.06.16 | 2 | 33 | 24 | 4 | 77 | 59 | 17 | தெற்கு |
| 18.06.16 | 2 | 32 | 23 | 4 | 79 | 62 | 17 | தெற்கு |
| 19.06.16 | 2 | 32 | 23 | 4 | 79 | 62 | 17 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்து வரும் இரண்டு நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவுவதால், கார் பருவத்திற்கு நாற்றங்கால் தயாரித்து முளைக்க வைத்த விதைகளை விதைக்கவும். 17 முதல் 19-ம் தேதி வரை மழை எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, விதைத்த மூன்று நாட்கள் கழித்து தண்ணீரை வடிக்கவும்.
- ✓ 17 முதல் 19-ம் தேதி வரை தூறல் மழை எதிர்பார்க்கப்படுவதால் முப்பது நாட்கள் வயதுடைய மஞ்சளில் கை களை எடுக்கவும்.
- ✓ 17 முதல் 19-ம் தேதி வரை தூறல் மழையே எதிர்பார்க்கப்படுகிறது. எனவே 60 நாட்கள் வயதுடைய பூக்கும் மற்றும் பால் பிடிக்கும் பருவத்திலுள்ள கம்பு மற்றும் சோளம் பயிர்களுக்கு நீர் பாசனம் செய்யவும்.
- ✓ அதிக காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் மற்றும் அதிக காற்றின் வேகம் எதிர்பார்க்கப்படுவதால், கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான குடிநீர் கொடுக்கவும்.
- ✓ காற்றின் வேகம் 17 கி.மீ அளவுக்கு வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ காற்றின் வேகம் 17 கி.மீ அளவுக்கு வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.


பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.